Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் .**

**திருவெண்ணெய்நல்லூர்.**

# CC.No. 176/2024

**2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | |
| பெயர் | - | எழிலரசி | வட்டம் | - | |
| க/பெ | - | ராஜேஷ் | சமயம் | - | |
| கிராமம் | - | | வயது | - | |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 21.11.2025 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | -திறந்த நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர். |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக – திரு. ஐ. பாரூக் ஷா, பி.ஏ., எல்.எல்.எம்., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-2 |
| | எதிரிக்காக திரு. V.சுரேஷ் பாபு வழக்கறிஞர், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE POINT)** | |
| இடம் ( Venue) | மதுவிலக்கு அமலாக்க பிரிவு, கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | திருமதி. எழிலரசி , காவல் ஆய்வாளர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு, கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| சாட்சி ( Witness) | அசா.5 |

சாட்சி மதுவிலக்கு அமலாக்க பிரிவு, கள்ளக்குறிச்சியிலிருந்து நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறார்

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை, 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குவிமுச 317 மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.)**
**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

1. அ.சா.1ல் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் 4 வது எதிரியை பற்றி எதாவது சொல்லியுள்ளாரா என்றால் சொன்னால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் 4 வது எதிரியான பாக்கியத்தை பற்றி சொல்லாத நிலையில் வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையில் எவ்வாறு 4 வது எதிரியை சேர்த்துள்ளார் என்றால் எனது விசாரணையில் 4 வது எதிரியை சொன்னதால் அவ்வாறு சேர்த்துள்ளேன்.
2. புகார் வாக்குமூலத்தில் உள்ளது தான் முதல் தகவல் அறிக்கையில் இருக்க வேண்டும் என்றால் எனது விசாரணை என்று உள்ளது. புகார் வாக்குமூலத்தில் உள்ளது தான் முதல் தகவல் அறிக்கையில் பதிய வேண்டும் என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றும் முதல் புகார் வாக்குமூலத்தில் உள்ளது தான் முதல் தகவல் அறிக்கையில் இருக்கவேண்டும் என்றால் சரியல்ல.
3.இந்த வழக்கிற்கு நேர்எதிர் வழக்கு உள்ளதா என்றால் ஆவணங்கள் பார்த்தால் தான் சொல்ல முடியும். காவல் நிலைய ஆணைப்படி எதிரிகளின் வழக்கு விவரங்கள் சி.டி. பைலில் இருக்கவேண்டும் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். வழக்கை எப்போது எத்தனை மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 20 ந் தேதி சுமார் 05.30 மணியளவில் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்றேன்.
4. சம்பவ இடத்தில் பார்வை மகசர் சாட்சிகளான ராமசாமி, சிவநேசனை விசாரணை செய்தேன். மற்ற சாட்சிகளை யாரையும் சம்பவ இடத்தில் விசாரணை செய்யவில்லையா என்றால் வீரபத்திரன், டேவிட். மருத்துவமனையில் யார் யாரை எப்போது விசாரித்தேன் என்றால் வீரபத்திரன், டேவிட்டை அன்றைய தினமே விசாரித்தேன்.
5. எந்த சாட்சியுமே நான் சம்பவ இடத்தில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் எங்கு நடந்தது என்று தெரிந்துகொண்டேனா என்றால் ரோட்டுத் தெரு, ஆமூர் காலணி. ரோட்டுத் தெருவில் எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்றால் எதிரி சண்முகம் வீட்டில் முன்பு நடந்தது. எனது விசாரணையிலோ, புகாரிலோ சம்பவம் சண்முக வீட்டின் வாசலில் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் ஆமூர் ரோட்டு என்று சொல்லியுள்ளார்கள். சண்முக வீட்டின் வாசலில் சம்பவம் நடந்ததாக சாட்சிகள் யாரேனும் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால்

இல்லை.

6. இந்த வழக்கில் பிரகாஷ் மட்டும் தான் காயம்பட்டவரா என்றால் ஆமாம். இந்த புகாரின் அடிப்படையில் வேறு யாரும் அடிப்பட்டு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் என்னுடைய விசாரணையில் என்னுடைய வழக்கு கோப்பில் வேறு யாரும் போகவில்லை. வழக்கு ஆவணங்களை நான் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான்.

7. மருத்துவரிடம் தெரிந்த 4 நபர்கள் அடித்ததாக தான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். மருத்துவரிடம் 4 ஆண்கள் என்று சொல்லியுள்ள நிலையில் அதனடிப்படையில் புகார்தாரரை விசாரித்தேனா என்றால் எனது விசாரணையில் அடித்த 4 பேர்களும் சொல்லியுள்ளார். நான் அ.சா.1 -ஐ மருத்துவரை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை யாரும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. வசந்தா என்பவரை விசாரணையும் செய்யவில்லை, அவருடைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மகசர் சாட்சிகள் இருவருக்கும் அந்த இடத்தில் வீடு இல்லை என்றால் சரிதான். அ.சா.1ன் தந்தை, சகோதரரை சாட்சியாக போட்டுள்ளேன், அந்நிய சாட்சிகளை சாட்சியாக போடவில்லை என்றால் சரியல்ல. ராமசாமி, சிவநேசன் ஆகியோர்களை விசாரித்தேன். அந்த சம்பவ இடத்தில் உள்ள வீட்டுகாரர்களை யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. வீரபத்திரனின் அப்பா பெயர் எனது விசாரணையில் சொல்லப்படாததால் நான் வீரபத்திரனை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வீரபத்திரனின் அப்பா பெயர் விடுப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலத்தில் சாட்சி டேவிட் சம்பவம் முடிந்து தான் வந்துள்ளார் என்றும், சம்பவத்தை பார்த்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10. முதன் முதலில் காயம்பட்ட பிரகாஷ் எங்கு சிகிச்சை பெற்றார் என்றால் திருவெண்ணெய்நல்லூரில் முதல் சிகிச்சை பெற்றுள்ளார். அந்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும் போது அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். மற்ற எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்ற பிறகு அவர்களை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

11. இதற்கு நேர்எதிர் வழக்கின் குற்ற எண்.896/2015 நான் தான் வழக்கு பதிவு செய்துள்ளேன், அதில் பாக்கியம் தான் புகார்தாரர், டேவிட், பிரகாஷ், வீரன் எதிரிகள் என்றால் என்னிடம் அந்த வழக்கு கோப்பு இல்லை. நேர்எதிர் வழக்கு இருக்கிறது, அதிலும் நான் தான் விசாரணை அதிகாரி என்றால் வழக்கு கோப்பை பார்த்தால் தான் சொல்ல முடியும். நான் சாட்சிகளை யாரும் விசாரணை

செய்யாமல், எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வரைபடத்தில் எதிரி சண்முக வீட்டிற்கு சம்பவம் நடந்ததாக உள்ளது, அதனால் சாட்சிகள் தான் எதிரிகள் வீட்டிற்கு சென்று தாக்கினார்கள் என்றால் சரியல்ல. நேர்எதிர் வழக்குகளில் யார் அக்கிரமகாரர்கள் என முடிவு செய்து நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பி வேண்டும், நான் சரி வர விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** - இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.